Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 111/2023

## Deposition of P.W.7

| | | |
|---|---|---|
| Name | : | சமுத்திரராஜன் |
| Father's Name | : | வேலுசாமி |
| Village | : | புதுக்கோட்டை |
| Age | : | **56/2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 03.12.2024**
(1, 2, 3, 4, 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. 1, 2, 3, 4, 5 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

முதல்விசாரணை

நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்று தற்போது புதுக்கோட்டை, பெரியார் நகரில் வசித்து வருகிறேன். கடந்த **15.06.2023**ஆம் தேதி சம்மட்டிவிடுதி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவந்தபோது சம்மட்டிவிடுதி காவல் நிலைய குற்ற எண்**.148/2022,** சட்டப்பிரிவு **379** இதச கீழான வழக்கில் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் என்பவரால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு சம்மட்டிவிடுதி காவல் நிலைய உதவி ஆய்வாளர் பொறுப்பை கூடுதலாக கவனித்து வந்த ஆலங்குடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் கலைச்செல்வன் என்பவரால் பகுதியாக புலன் விசாரணை செய்து வைக்கப்பட்டிருந்த வழக்கு கோப்பினை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு பட்டியல் சாட்சிகளை மீண்டும் விசாரித்தபோது அவர்கள் ஏற்கனவே உதவி ஆய்வாளர் கலைச்செல்வன் என்பவரிடம் சொன்ன சங்கதிகளையே என்னிடம் மீண்டும் சொன்னதால் அவர்களுக்கு தனியாக மறுவாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து சம்பவம் உண்மை என தெரியவந்நதால் **15.06.2023** அன்று எதிரிகள் அய்யப்பன், முருகேசன், குமார், ராமராசு, ஜோதிநாகூர் ஆகிய **5** பேர் மீது சட்டப்பிரிவு **379** இதச பிரிவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் வழக்கு கோப்புகளை உதவி ஆய்வாளர் கலைச்செல்வனிடமிருந்து எந்த தேதியில் பெற்றுக்கொண்டேன் என்றால் **15.06.2023** அன்று பெற்றுக்கொண்டேன். நான் உதவி ஆய்வாளர் கலைச்செல்வன் விசாரித்த சாட்சிகளை எந்த தேதியில், எங்கு வைத்து

விசாரித்தேன் என்றால் விசாரிக்கவில்லை. தற்போது சாட்சி நிலையத்தில் வைத்து விசாரித்தேன் என்று கூறுகிறார். நான் சாட்சிகள் யாரையும் மறுவிசாரணை செய்யவில்லை என்றாலும், உதவி ஆய்வாளர் கலைச்செல்வன் தயார் செய்து வைத்திருந்த வழக்கின் ஆவணங்களை கொண்டு இயந்திரகதியில் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இறுதியறிக்கையில் சொல்லியுள்ளவாறு எதிரிகள் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

<u>ம.வி.இல்லை</u>